## **சார்பு நீதிமன்றம், மேலூர்**

நாள் *:27.08.2024*

வா.சா.*1* – ராஜா மொகமத், த/பெ. காதர் மைதீன்

*O.S No. :359/2021*

*(*சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.*)*

**பிரவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி** *:*

வழக்கு சொத்து *1996*ம் ஆண்டு என் தந்தை கிரயம் பெற்ற சொத்தா என்றால் இல்லை உழவடை பாத்தியம் ஆகும். அவ்வாறு தான் நான் என்னுடைய வழக்குரையிலும் கூறியுள்ளேன். நான் தவறாக சொல்கிறேன் என்றும் என் தந்தை கிரயம் பெற்ற சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை நடந்தது என்றால் நடந்தது. பாகப்பிரிவினை பற்றி வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் நினைவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பிருந்தேன் என்றால் சரிதான். அதற்கு *6*ம் பிரதிவாதியான மரியம்பீவி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் நினைவில்லை. அதை நான் இந்த வழக்கில் வா.சா.ஆ.*4* காக தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று கூறிகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பதில் அறிவிப்பில் *30.05.1992* அன்று பாகம் ஏற்பட்டதாகவும் அது சம்மந்தமாக பாக குறிப்பானது *03.06.1995* அன்று பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கான நியாபக குறிப்பு எழுதப்பட்டதாக தெரிவித்துள்ளார் என்றால் நினைவில்லை. மேற்படி பதில் அறிவிப்பில் முதல் தாரத்து பிள்ளைகளுக்கு பாத்தியம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட்டிருந்தும் என்னுடைய வழக்குரையில் *03.06.1995* அன்று எழுதப்பட்ட பாகப்பிரிவினை குறித்து மரியம்பீவி தெரிவித்ததை மறுத்து நான் என் வழக்குரையில் தெரிவிக்கப்படவில்லை

என்றால் *03.06.1995* பாகப்பிரிவினை எழுதப்படவில்லை அதனால் தெரிவிக்கப்படவில்லை. *03.06.1995* அன்று எழுதப்பட்ட பாகப்பிரிவினையை மறுத்து என் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல நான் குறிப்பிட்டுள்ளேன். நான் தவறாக சொல்கிறேன் என்றும் நான் மறுத்து குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே எனக்கு எதிராக வழக்கு போகும் என்பதற்காக மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. *1*ம் பிரதிவாதி *1992, 1995* வாக்கில் வங்கியில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். *2*ம் பிரதிவாதி அப்போது அரசு மருத்துவமனையில் வேலையில் இருந்தார் என்றால் சரிதான். *1997*ல் தான் அரசு போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராக பணியில் சேர்ந்தேன். *6*ம் பிரதிவாதி மரியம்பீவியின் பிள்ளைகள் அப்போது இளவர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். *1992*ல் மரியம்பீவியின் குழந்தைகளுக்கு பாகத்தில் பங்கு எதுவும் ஒதுக்கப்படவில்லை. *1992*ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஜமாத்தில் பேசி முடிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் *6*ம் பிரதிவாதியான மரியம்பீவியின் பிள்ளைகளுக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை என்பதால் தான் என் தந்தையினுடைய எதிர்கால சொத்துக்களும் மரியம்பீவியின் குழந்தைகளுக்கு நாங்கள் எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் நான் கையெழுத்து செய்துவிட்டு தற்போது அது எழுதிப்படவில்லை என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சியிடம் *03.06.1995* தேதியிட்ட பாகப்பிரிவினை செய்யப்பட்டதற்காக ஆவணம் காட்டப்பட்டு அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்று சாட்சி மறுக்கிறார். நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை எழுதி வைத்த பாக பிரிவினை குறிப்பானது அசல் அவரிடமே உள்ளது என்னிடம் நகல் தான் உள்ளது. வழக்கில் சொத்து விவரம் குறிப்பிட்டது யார் என்றால் நான்தான். மேற்படி சொத்து விவரத்தில் *6* பிரதிவாதிக்கு *1/8* நீங்களாக மீதியுள்ள *2*ம் பிரதிவாதிக்கு *1/14* நீங்களாக எனது பங்கு *2037* சதுரடி சர்வே எண்.*406/9* ஐ வழக்கு சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய வழக்குரையின் சொத்து விவரத்தில் *6*ம் பிரதிவாதிக்கு *1/8* பங்கு நீங்களாக மீதியுள்ள *2*ம் பிரதிவாதிக்கு *1/14* நீங்களாக எனது பங்கு

*2037* சதுரடி சர்வே எண்.*406/9* ஐ வழக்கு சொத்தாக காட்டியுள்ளேன் என்றும் எனக்கு *13/52* பங்கிற்கு *2037* சதுரடிக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் *4* சென்டிற்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தந்தை காதர் மைதீனுக்கு *5* ஆண் வாரிசுகளும் *1* பெண் வாரிசும் உண்டு என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் *6*ம் பிரதிவாதி மரியம்பீவி உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து *23* சென்டை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும் நான் குறிப்பிட்டுள்ள விகிதமும் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது *3* முதல் *5* பிரதிவாதிகளுக்கு கிபாவாக ஒதுக்கப்பட்ட சொத்து என்றும் அதை என் தந்தையார் உயிருடன் இருந்த காலத்திலேயே *3* முதல் *5* பிரதிவாதிகளுக்கு கொடுத்து அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு தனித்த சுவாதீனத்தில் அனுபவித்து வருகின்றார்கள் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் கிடையாது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

*(*மறு விசாரணை இல்லை*)*

*Sd/- xxxxxx*
*Sub Judge,*
*Melur.*